**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி – பிப்ரவரி 2022**
**P203 படைப்பிலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1 இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. சங்க இலக்கியங்களில் நாடகக் கூறுகள் காணப்படும் நூல்கள் யாவை?
2. பாரதி தாசன் எழுதிய இரு நாடங்கள் யாவை?
3. இன்றைக்கு மரபுக்கவிதையில் எவ்வகைப் பாக்களும் பாவினங்களும் செல்வாக்குப் பெற்றுள்ளன?
4. புதுக்கவிதையை உரைவீச்சு என்றவர் யார்?
5. கண்ணி வகையில் அமைந்த நூல்கள் இரண்டினைத் தருக?
6. கடவுள் தாம் தம்மை எழுதத் தூண்டியதாக நம்பின இருபெரும் கவிஞர்கள் யாவர்?
7. தமிழ் வரலாற்று நாவலாசிரியர்கள் இருவரையும் அவர்கள் எழுதிய நாவல்களின் பெயர்களையும் சுட்டுக.
8. உலகில் முதல் நாவல் என்ற பெருமைக்குரிய நூல் எது?
9. தமிழ்ச் சிறுகதைகளை வளர்ந்த பெருமைக்குரிய இதழ் எது?
10. சிறுகதைக்குரிய உத்திகள் மூன்றினைக் குறிப்பிடுக.
11. தமிழில் யதார்த்த நாவல்கள் இரண்டினை ஆசிரியர் பெயருடன் எழுதுக.
12. முதற்பள்ளு இலக்கியம் எது?
13. மகேந்திரவர்மன் எழுதிய நாடகங்களுள் ஒன்றினை எழுதுக.
14. உரையாசிரியர் என்றே அழைக்கப்படுபவர் யார்?
15. இளமை, அழகு, புதுமை உள்ள நடை யாருடையது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. படைப்பிலக்கியம் தோன்ற உண்மையான காரணங்கள் மூன்றினை எழுதுக.
2. பிறிதுமொழிதலுக்கு இணையான புதுக்கவிதை உத்தியாக எதனைக் கூறலாம்? உதாரணம் தருக.
3. பண்டைக் காலத்தில் இருந்த நாடக நூல்களின் பெயர்கள் எழுதுக.
4. தலைமைப் பாத்திரம் என்றால் என்ன? விளக்குக.
5. ஜெயகாந்தனின் உரைநடைச் சிறப்புகள் ஐந்தினை எழுதுக.
6. பம்மல் சம்பந்த முதலியார் நாடகத்திற்கு ஆற்றிய பணிகளைச் சுட்டுக.
7. உரையாசிரியர்களில் நச்சினார்க்கினியரின் உரைத்திறத்தை விளக்குக.
8. தலித் நாடக அரங்கில் குறிப்பிடத்தக்கவர் யார்? அவரின் நாடகப் பணிகளைச் சுட்டுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) காலந்ததோறும் கவிதையின் வடிவமும் பொருண்மையும் மாறி வந்த வரலாற்றைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கவிதை வரலாற்றில் 'இசைப்பா' பெறும் இடத்தை விளக்குக.

2. (அ) இன்றைய தமிழ்ச் சிறுகதைகள் எத்தகு சமூக விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதை விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) பெண்ணியம் குறித்த விழிப்புணர்பு தமிழ் நாவல்களில் தடம் பதித்துள்ள பாங்கினை விளக்குக.

3. (அ) காலந்தோறும் நாடகம் பெற்று வரும் மாற்றங்கள், சிறப்புகள் பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) இருபதாம் நூற்றாண்டு உரைநடையின் பொற்காலம் என்பதை நிருவுக.

***